**பியகம பிரதேச சபை - 2022**
---------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பியகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக்கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பியகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுன்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான விதி இலக்கம் 90 மற்றும் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.6 படி வருமானங்கள் அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம், காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் கணக்கீட்டுக் கொள்கையை சரியாக பதிவு செய்து கணக்குகள் தயாரிக்கப்படும் என. | அட்டுரு அடிப்படையில் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களின் பெறுமதி ரூபா 1,103,733 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 75 பர்சஸ் அளவான மற்றும் பெறுமதி ரூபா 8,000,000 தொகைக்கான 02 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 58,789,453 தொகை பெறுமதியான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள 28 காணிகளை மதிப்பீடு செய்து காணிகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | கட்டிடங்களுடனான 15 காணிகள், காணி அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளன என. | - மேற்படி - |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 2008 மற்றும் 2012 ஆண்டுகளின் பெறுமதி மதிப்பீடு அடிப்படையில் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு கிடைத்தவுடன் புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி வீதவரி அறவீடு செய்யப்படும் என. | பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன்படி வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை விதி இலக்கம் 60 | பதவியணி அல்லாத 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 மிகையான பெறுமதியில் ரூபா 5,370,575 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | தற்போது நிதி விதியின் படி முற்பணத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 188,532,345 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 128,555,443 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 78,530,710 | 78,878,277 | 72,893,953 | 72,855,554 | 78,862,188 | 78,408,979 | 68,095,859 | 66,871,230 |
| (ii) | வாடகை | 7,679,130 | 7,184,542 | 6,374,447 | 11,218,577 | 7,794,050 | 7,686,470 | 6,083,182 | 10,408,482 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,318,000 | 5,778,977 | 5,778,977 | - | 6,094,000 | 4,979,665 | 4,979,665 | 30,000 |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 26,683,100 | - | 42,577,868 | - | 48,205,100 | - | 59,611,620 | - |
| | மொத்தம் | 122,210,940 | 91,841,796 | 127,605,245 | 84,074,131 | 140,955,338 | 91,075,114 | 138,770,326 | 77,309,712 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் வீதவரி மற்றும் வரி நிலுவையாக காணப்பட்ட காலம் 10 வருடங்களை மிகைத்திருந்த மீதிகள் ரூபா 16,714,446 தொகையும், 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதிகள் ரூபா 17,224,668 தொகையும், 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 13,316,058 தொகையுமாக இருந்தது. | அறவீடு செய்ய முடியாத வருமானங்களை பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கும், உப அலுவலக மட்டத்தில் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் படி நிலுவை வருமானம் அறவீடு செய்யப் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியில், வருட ஆரம்ப வர்த்தக நிலைய வாடகை மீதி ரூபா 8,801,527 தொகையில், அறவீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 432,705 ஆக காணப்பட்டதுடன், 5 வருடங்களுக்கும் 10 வருடங்களும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 8,281,742 தொகையும், 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 1,023,480 தொகையாக காணப்பட்டது. | 2023 ஆண்டில் நிலுவை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் படி நிலுவை வர்த்தக நிலைய வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பொதுமக்கள் முறையீடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்கு கிடைத்திருந்த பொதுமக்கள் முறையீடுகள் 431 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொதுமக்கள் முறைப்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12,896,471 தொகை இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்ததுடன், 2022 ஆண்டிற்கு முன்னரான காலப் பகுதி தொடர்பாக ரூபா 21,204,062 தொகை செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறாயினும் சபையினால் குப்பையை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் உக்கக்கூடிய குப்பைகளை பயன்படுத்தி உயிர் வாயு மற்றும் திரவ உரம் உற்பத்தி செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொருத்தமான காணியொன்று கொள்வனவு செய்து குப்பை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் செயற்படுத்தப்படும் 2 தகன கூடங்களும் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு 2023 மார்ச் மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் அட்டவணை (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள 39 விடயங்களில் தகனகூட அடங்குவதில்லை என. | சட்டத்தின் பிரகாரம் தகன கூடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கடன் பட்டோர் மீதி ரூபா 21,629,511 தொகையாக இருந்தது. | பணம் மீளளிப்புச் செய்யப்படுகின்றது என. | கடன் பட்டோர் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 135,277,013 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் நிதி மீளளிப்பு செய்வதற்கு உள்ளது என. | - மேற்படி - |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்காத மந்திரிமாருக்கான உளப்பாங்கு அபிவிருத்தி தொடர்பான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வொன்று நடாத்தி அதற்காக ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கும் செலவு விடயத்தின் 57 சதவீதப் பெறுமதியாகிய ரூபா 855,370 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டம் பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம் பெற்று நடாத்தப்பட்டதொன்றாக இருந்ததுடன், சபையின் காலமும் முடிவடைந்திருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,100,000 தொகை பெறுமதியான கட்டிடத்தின் மேல் மாடியின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் கட்டிடம் சிதைவுற்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | கட்டிட ஆய்வு நிறுவனத்தின் பரிந்துரைகளின் படி செயற்படுவேன். | சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 72,880,000 தொகை பெறுமதியான 24 காணித் துண்டுகளில் பெயர்ப் பலகை பொருத்தியிருக்காததுடன், எல்லைகளும் உரியவாறு தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | எல்லைகளை தயாரித்து பெயர் பலகைகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணித் துண்டுகளை அளவை செய்து பெயர் பலகை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 479,000 தொகை பெறுமதியான 4 கிணறுகள் கண்டுகொள்ள முடியாமல் இருந்ததுடன், ரூபா 1,854,000 தொகை பெறுமதியான 5 கிணறுகள் அங்கீகாரம் இன்றி வேறு தரப்பினர்களினால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. | எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கீடு செய்யப்பட்ட காணிகள் பௌதீக ரீதியாக காணப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 500,000 தொகைக்கான கட்டிடத்தின் உரிமை உறுதிப்படுத்தியிருக்கவில்லை எனவும், ரூபா 100,000 தொகை பெறுமதியான 2 மயானங்கள் தனிப்பட்ட மயானங்கள் போல் காணப்படுவதுடன், ரூபா 500,000 தொகை பெறுமதியான மயானத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | குழுவின் பரிந்துரையின் படி தீர்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டுச் சென்றுள்ள ஓய்வு, பெற்றுள்ள மற்றும் இறந்த உத்தியோகத்தர்கள் 06 பேரிடம் கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 1,045,540 தொகை அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |